**SET – 4**

**Series : ONS/1**

**Code No. 6/1**

**Roll No.** | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **7** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **9** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minutes time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer book during this period.

# தமிழ்

# TAMIL

*கால அளவு : **3** மணி* | *மொத்த மதிப்பெண்கள் : **100***

*Time allowed : **3** hours* | *Maximum marks : **100***

## பகுதி-அ (50 மதிப்பெண்கள்)

1. (அ) கீழ்வருவனவற்றில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக. **5**

(i) பணி மலை மீது ஏறி பயனம் செய்தனர்.

(ii) ஏரி, குளம், குட்டை கானாமல் போணதால்தான் தண்ணீர் பஞ்சம் ஏற்பட்டது.

(iii) தீவிரவாதத்தை ஒலிக்க இன்று ஒண்றுபடுவோம்.

(iv) இறைதேடுமுன் இரையைத்தேடு.

(v) காணகம் சென்று அதன் அழகைக் கான்க.

(vi) அரன்மனையில் ஒரு அரண்கோவில் உள்ளது.

(vii) அதிக ஒளி செவியையும் மிகுந்த ஒலி கண்ணையும் பாதிக்கும்.

(ஆ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களில் வல்லின மெய்களை இட்டு எழுதுக. **5**

(i) தோட்டத்திற்கு சென்று பூக்களை பறித்துவா.

(ii) இபாடல் அழைப்பு சருக்கத்தில் உள்ளது.

(iii) எந்த காலத்திலும் அது தீ பிடிக்காது.

(iv) அந்த வெள்ளை தாளில் எழுதி பார்.

(v) பலா சுளை தின்று மகிழ்ந்தேன்.

(vi) ஓவிய கலை ஒரு காலத்தில் உயரிய நிலையை பெற்றிருந்தது.

(vii) இப்பாடல்கள் மனபாட பகுதியில் உள்ளன.

(இ) கீழ்வரும் வாக்கியங்களில் எவையேனும் **ஐந்து** வாக்கியங்களைக் கூறியவாறு மாற்றி எழுதுக. **5**

(i) கண்ணன் பாடம் படித்தான். (பிறவினையாக்குக)

(ii) மக்கள் கூடித் தேரை இழுத்தனர். (செயப்பாட்டு வினையாக்குக).

(iii) நாடு முன்னேற வேண்டுமானால் நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். (தொடர்வாக்கியமாக மாற்றுக)

(iv) "ஊருக்குப் போனதும் கடிதம் எழுது"- என்று என் தந்தை சொன்னார். (அயற்கூற்றாக மாற்றுக)

(v) தினமும் படித்தான்; தேர்வு எழுதினான்; வெற்றி அடைந்தான். (கலவை வாக்கியமாக மாற்றுக)

(vi) மழை என்றாலே சென்னை வாசிகள் அச்சம் கொள்கின்றனர். (எதிர்மறையாக்குக)

(vii) என்தாய் உண்பித்தாள். (தன்வினையாக்குக)

2. (அ) கீழ்வரும் பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக. **10**

ஒரு வாகனம் வாங்குகிறோம்; ஒரு வீட்டு உபயோகப் பொருளை வாங்குகிறோம்; ஒரு துணியை வாங்குகிறோம். இவையெல்லாம் நமக்காக உழைக்கின்றன. நாம் நம் உழைப்பையும் திறமையையும் விலையாகக் கொடுத்துப் பணத்தை வாங்குகிறோம். ஆனால் இதை மட்டும் சேவகனாக்கி நமக்கு ஊழியம் செய்யவைக்காமல், இதனை எசமானனாக்கிக்கொண்டு, இதற்குக் கொத்தடிமைகளாகிப் போகிறோம். பணத்தைப் பூஜீக்கும் நாம் அவற்றை இரும்புப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டுவதோடு, பண விஷயத்தில் இதயஅறைகளையும் இரும்புச் சிறைகளாக்கிக் கொள்கிறோம். "உன்னிடம் பணம் இல்லா விட்டால், உன்னை எவருக்கும் தெரியாது; உன்னிடம் அது அதிகமாக இருந்தால், உன்னையே உனக்குத்தெரியாது." என்ற புகழ்மிக்க தத்துவத்தை நாம் மறந்து விடகூடாது.

குருநானக், ஒரு கஞ்சப் பிரபுவிடம் ஓர் ஊசியைக் கையில் தந்து இப்படிச் சொன்னாராம். "உன் எவ்வளவோ சொத்துக்களுள் இதைமட்டுமாவது மேலுலகத்திற்குக் கொண்டு வா" என்றாராம். தன் தவறை நன்கு உணர்ந்தானாம், அப்பணக்காரப்பிரபு. எனவே வாழப் பணம் தேவை; மறுக்கவில்லை; ஆனால் பணமே

வாழ்க்கையாகி விடாது. இந்த உண்மையை உணர்ந்தால், பணத்திற்கு எவரும் அடிமையாக மாட்டார்கள்.

**வினாக்கள்.**

(i) எதற்குக் கொத்தடிமையாகிறோம் ? ஏன் ? **2**

(ii) புகழ்மிக்க தத்துவம் யாது ? **2**

(iii) கஞ்சப் பிரபுவிடம் குருநானக் கூறியாது யாது ? **2**

(iv) எப்போது நாம் பணத்திற்கு அடிமையாக மாட்டோம் ? **2**

(v) இப்பத்திக் கேற்ற தலைப்பொன்றினைக் கொடு. **2**

(ஆ) கலைமாமணி விருது பெற்ற ஒரு கலைஞரை நேர்காணல் செய்க. **5**

**(அல்லது)**

கீழ்வரும் பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

மூலையில் கிடக்கும் வாலிபனே - தினம்
  முதுகிலா வேலையைத் தேடுகிறாய் !
பாலை வனம்தான் வாழ்க்கையென - வெறும்
  பல்லவி எதற்குப் பாடுகிறாய் ?
வெறுங்கை என்பது மூடத்தனம் - உன்
  விரல்கள் பத்தும் மூலதனம் !
கருங்கல் பாறையும் நொறுங்கி விழும் - உன்
  கைகளில் பூமி சுழூன்று வரும் !
                    - தாரா பாரதி

**வினாக்கள்**

(i) வாலிபன் எதனைத் தேடுகிறான் ? **1**

(ii) என்ன சொல்லி பல்லவி பாடுகிறான் ? **1**

(iii) மூலதனம் எது ? **1**

(iv) எப்போது உன்கைகளில் பூமி சுழன்று வரும் ? **2**

3. கீழ்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்பில் மூன்று பக்க அளவில் கட்டுரை வரைக. **10**

(i) சென்னை வெள்ளமும் சமூக ஆர்வலர் தொண்டும்.

(ii) உலக அரங்கில் இந்தியா.

(iii) உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்.

4. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் **ஒன்று** குறித்துக் கடிதம் எழுதுக. **10**

உமது பகுதியில் ஏற்பட்ட வெள்ளபாதிப்புக் குறித்து மாநகராட்சி மேயருக்கு ஒரு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

**(அல்லது)**

முகநூலில் நீ படித்து மகிழ்ந்த பதிவிறக்கம் குறித்து நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

(எக்கடிதமாயினும் உமது முகவரி: தேவன்/தேவகி, 84. தணிகாசலம் சாலை, சென்னை - 17 எனக் கொள்க)

## பகுதி-ஆ (50 மதிப்பெண்கள்)

5. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. **$2 \times 10 = 20$**

(i) இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் வகைமை குறித்துப் பரிதிமாற்கலைஞர் உரைப்பனவற்றைத் தொகுத்து வரைக.

(ii) கவிதை இன்னது என்று பேராசிரியர் வையாபுரிப் பிள்ளையவர்கள் வரையறுக்க முயலும் நான்கு கருத்துகளையும் கட்டுரை வடிவில் தருக.

(iii) 'பழந்தமிழ் மாந்தர் பெரிய முயற்சியையே மதித்து ஒழுகினர்' என்பதனையும் ஈகைப் பண்பில் சிறந்து விளங்கினர் என்பதனையும் விளக்குக.

(iv) வயிற்றுப் பெருமான் பொருட்டு மக்கள் செய்யும் செயல்களாய் அறநெறிச்சாரம் கூறுவன யாவை ?

6. கீழ்வரும் செய்யுட் பகுதியைப் படித்து தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக. **5**

"திங்களொன் றிருப்பன் இன்னே; திருவுளம் தீர்ந்த பின்னை

மங்குவென் உயிரோடென்றுன் மலரடி சென்னி வைத்தாள்"

(i) இப்பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள நூல் எது ? ஆசிரியர் யார் ? **2**

(ii) இவ்வாறு யார் யாரிடம் கூறியது ? **2**

(iii) 'உன் மலரடி'- யார் மலரடி ? **1**

**(அல்லது)**

"உனை ஒன்று வேண்டுகிறேன் என்னால் ஆவ

துண்டென்றால் அதற்கென்றன் உயிருண்டென்றான்"

(i) இப்பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள நூல் எது ? ஆசிரியர் யார் ? **2**

(ii) இவ்வாறு யார் யாரிடம் கூறியது ? **2**

(iii) வேண்டியது யாது ? **1**

7. கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் **இரண்டனுக்கு** விடை தருக. $\mathbf{2 \times 5 = 10}$

(i) இந்தியர் அனைவரும் எவ்வெண்ணத்தைக் கொள்ளல் வேண்டும் ? ஏன் ?

(ii) தலைவன் வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குச் சொல்லியதை விளக்குக.

(iii) இராவணன் வருகையும் அதன்பின் நிகழ்ந்தனவுமாகிய செயல்களை எடுத்து எழுதுக.

(iv) பொறையுடைமை என்னும் அதிகாரத்தின் கீழ் வள்ளுவர் உணர்த்தும் கருத்துகளைத் தொகுத்து வரைக.

8. 'மூக்கப்பிள்ளை வீட்டு விருந்து' - இக்கதையின் கருத்தோட்ட-த்தினை திறனாய்வு செய்க. **10**

**(அல்லது)**

"மகன்" - இச்சிறுகதையின் கருப்பொருளும் சுவையும் குன்றாமல் சுருக்கி வரைக.

9. பூந்தோட்டச் சாமியாரின் பண்பு நலன்களைத் தொகுத்துத் தெழுதுக. **5**

**(அல்லது)**

பால்வண்ணப் பிள்ளையின் பிடிவாத குணத்தை எடுத்தெழுதுக.

---